பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**29 06 2026** **MONDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, புதுதில்லியில் இன்று மாலை நடைபெறும் விழாவில் வீரதீர விருதுகளை வழங்குகிறார்.

2. **Seychelles** பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று விக்டோரியாவில் இந்திய வம்சாவளியினரை சந்தித்து பேசினார்.

3. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் வலியுறுத்தியுள்ளார்.

4. ஜம்மு காஷ்மீரில் இவ்வாண்டுக்கான அமர்நாத் யாத்திரை அடுத்த மாதம் 3-ஆம் தேதி தொடங்குகிறது.

5. அமெரிக்க சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dhakshineswar Suresh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்...

<<<<<<<<>>>>>>>

சிறப்பாக செயல்பட்ட பாதுகாப்புப் படையினரின் சேவையை அங்கீகரிக்கும் வகையில், வீரதீர விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

முப்படை வீரர்கள், மத்திய ஆயுதப்படை வீரர்கள் மற்றும் பல்வேறு பாதுகாப்புப் படை வீரர்களுக்கு வீர தீர செயல்களுக்கான விருதுகளை அவர் வழங்குகிறார்.

தீவிரவாதத்துக்கு எதிராக பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளை கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது.

எல்லைப்பகுதிகள், கடல்சார் பாதுகாப்பு, வான்வழி பாதுகாப்பு, மனிதநேய நடவடிக்கைகளுக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

புதுதில்லியில் கடந்த **8**-ஆம் தேதி நடைபெற்ற முதல் கட்ட விழாவில், குடியரசுத் தலைவர் **51** பேருக்கு வீர தீர விருதுகளை வழங்கினார்.

<<<<<<<>>>>>>>

ஆப்பிரிக்க நாடான **Seychelles**-ல் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று விக்டோரியாவில் உள்ள நவசக்தி விநாயகர் கோவிலில் வழிபட்டார்.

இந்திய வம்சாவளியினரையும் பிரதமர் சந்தித்து உரையாடினார்.

**Peace** பார்கில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலைக்கு அவர் மலரஞ்சலி செலுத்த உள்ளார்.

அரசுமுறைப் பயணமாக **Seychelles** சென்றுள்ள பிரதமர் மோடி அந்நாட்டின் **50-**ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்டத்தில் நேற்று பங்கேற்றார்.

<<<<<<<>>>>>>>

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவும் வகையில், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய உணவுப்பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் வலியுறுத்தியுள்ளார்.

விவசாய தொழிலின் நீடித்த வளர்ச்சிக்கும், கிராம பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் இளைஞர்களுக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உணவு பதப்படுத்துதல் தொழிலை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் உணவு பதப்படுத்தும் துறையில் சிறு-குறு தொழில்களை தொடங்கி வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு மாணவர்கள், விவசாயிகள் மற்றும் இளைஞர்களின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

உணவு தானிய உற்பத்தியில் இந்தியா சுயசார்பு நிலையை எட்டியுள்ளதாக கூறிய திரு சிராக் பாஸ்வான், உணவு பதப்படுத்துதல் மூலம், உணவுப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இதனால் விவசாயிகளின் வருவாய் கணிசமாக அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

இதற்காக பிரதமரின் குறு உணவு பதப்படுத்தும் தொழில் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், இளம் தொழில்முனைவோர் மற்றும் பெண்கள் குறைந்த முதலீட்டில் தொழில் தொடங்கலாம் என்றும் அவர் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் இணைந்து, உலகத்தரத்திலான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் திரு சிராக் பாஸ்வான் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>>

நுகர்வோர் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள் விதிமுறைகளை கடைபிடிக்காத பட்சத்தில், அவற்றை சரிசெய்ய

ஏதுவாக ஜன் விஷ்வாஸ் சட்டத்தில் மத்திய அரசு திருத்தம் கொண்டுவந்துள்ளது.

இதன்படி, நிறுவனத்தின் பதிவு, ஆவணங்கள், பதிவேடுகள் பராமரிப்பு, எடையளவு, பாக்கெட்டுகள் மீது அச்சிடப்பட வேண்டிய அத்தியாவசிய நுகர்வோர் தகவல்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான வாய்ப்பை அளிக்கும் வகையில் இந்த சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

விதிமுறைகளை முறையாக பின்பற்றாத நிறுவனங்கள்மீது சட்ட நடவடிக்கையை தவிர்த்து சுமூக தீர்வுகாணும் வகையில் இந்த சட்டத்திருத்தத்தை மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை கொண்டுவந்துள்ளது.

<<<<<<<>>>>>>>

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே மாநிலங்களவை உறுப்பினராக இன்று பதவியேற்றுக்கொண்டார்

மாநிலங்களவை உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட அவருக்கு, குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன் பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில், காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித்தலைவர் திருமதி சோனியாகாந்தி, மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<<>>>>>>>

தேசிய ஆம்புலன்ஸ் சேவைக்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா வெளியிடுகிறார்.

புதுதில்லியில் இன்று நடைபெறும் 16-ஆவது சுகாதார மாநாட்டில் இதனை அவர் வெளியிடுகிறார்.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தடையற்ற ஆம்புலன்ஸ் சேவையை உறுதி செய்யும் வகையில் இந்த நெறிமுறைகளை மத்திய சுகாதாரத்துறை வெளியிடுகிறது.

ஆம்புலன்ஸ் சேவை வாகனங்களில் அடிப்படையான மற்றும் தரமான வசதிகளை உறுதி செய்வது மற்றும் பாதுகாப்பாக நோயாளிகளை மருத்துவமனைக்கு கொண்டு செல்வது உள்ளிட்டவற்றில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

அவசரகால மருத்துவ சேவையை உறுதி செய்யும் வகையில், ஜிபிஎஸ் சேவை மற்றும் ஒருங்கிணைந்த கட்டளை கட்டமைப்பை உருவாக்குதல் போன்றவை இதில் இடம்பெற்றுள்ளன.

மகப்பேறு மற்றும் சிசுக்களின் உடல் நலனை பாதுகாப்பதற்கான இலக்குகளை 2030-ஆம் ஆண்டுக்குள் எட்டுவதற்கான வரைவுத் திட்டம் Suman Road Map 2030-ம் அமைச்சர் திரு ஜெ பி நட்டா இம்மாநாட்டில் வெளியிடுகிறார்.

<<<<<<<>>>>>>>

தலைநகர் தில்லியில் 3-ஆவது கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான வாக்காளர் விவரங்களை சேகரிப்பதற்கான படிவங்கள் விநியோகிக்கும் பணி நாளை தொடங்குகிறது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி திரு அசோக் குமார், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் அடுத்த மாதம் 29-ஆம் தேதிவரை அனைத்து வீடுகளிலும் வாக்காளர் விவர சேகரிப்புப் படிவங்களை அளிப்பார்கள் என்று கூறினார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் கரூர் சட்டப்பேரவைத் தொகுதியின் அஇஅதிமுக உறுப்பினர் திரு எம் ஆர் விஜயபாஸ்கர் இன்று தமது பதவியை ராஜினாமா செய்தார்.

சட்டப்பேரவைத் தலைவர் திரு ஜே சி டி பிரபாகரை சந்தித்து தமது ராஜினாமா கடிதத்தை அவர் அளித்தார்.

இதுவரை அஇஅதிமுக-வில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஐந்து சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளனர்.

<<<<<<<>>>>>>>

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ், கிராமப்புற மக்கள் அதிக அளவில் பயன்பெற்று வருகின்றனர்.

இதற்கான பணிகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — சுரேஷ் - 24 Sec. )*

<<<<<<<>>>>>>>

ஜம்மு காஷ்மீரில் இவ்வாண்டுக்கான அமர்நாத் யாத்திரை அடுத்த மாதம் 3-ஆம் தேதி தொடங்குகிறது.

இதையொட்டி, யாத்ரிகர்கள் பாதுகாப்பாக செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஜம்மு காஷ்மீர் அரசு மேற்கொண்டுள்ளது.

பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இன்று பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு நடைபெற்றதாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

ஒடிஷா மாநிலம் புரி ஜெகந்நாதர் ஆலயத்தில் இன்று புனித நீராட்டு திருவிழா நடைபெற்றது.

இன்று காலை நடைபெற்ற சிறப்பு பூஜையில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

இக்கோவிலின் புனித பொற்கிணற்றில் இருந்து **108** கலசங்களில் வேத மந்திரங்கள் ஒலிக்க ஊர்வலமாக புனித நீர் கொண்டுவரப்பட்டது.

ரத யாத்திரையின் தொடக்கமாக நடைபெறும் இந்த பௌர்ணமி புனித நீராடல் நிகழ்ச்சி, உலக பிரசித்தி பெற்ற ரத யாத்திரையின் முக்கிய பகுதியாகும்.

புனித நீராடுதலுக்குப்பின் அர்ச்சகர்கள் **15** நாட்கள் சிறப்பு பூஜை மேற்கொள்கின்றனர்.

இதன்பிறகு, பூரி ஜெகன்நாதரின் **Nabajoubana** தரிசனம் அடுத்த மாதம் **16-**ஆம் தேதி ரத யாத்திரையையொட்டி நடைபெறும்.

புரி ஜெகன்நாதர் கோவில் திருவிழாவையொட்டி, பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டள்ளன.

<<<<<<<>>>>>>>

மேற்குவங்கம், சிக்கிம் மற்றும் இமயமலை பகுதிகளில் இன்று மிக கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், மத்தியப்பிரதேஷ், சட்டீஸ்கர், ஜார்கண்ட், பீகார், உத்தரப்பிரதேஷ் மற்றும் உத்தராகண்டில் அடுத்த இரண்டு முதல் மூன்று நாட்களுக்குள் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என்றும் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, கேரளம் மற்றும் மாஹேயில் அடுத்த இரண்டு நாட்களில் பரவலாக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர கர்நாடகா, தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

வெனிசுலாவில் கடந்த புதன்கிழமை நேரிட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 450-ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் **3** ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

அமெரிக்க சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dhakshineswar Suresh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **6-1, 6-4** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Mitchell Krueger**-ஐ வென்றார்.

-----------------

உலகக் கோப்பை கால்பந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு கனடா முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற நாக்அவுட் ஆட்டத்தில் கனடா **1-0** என்ற கோல் கணக்கில் தென்னாப்பிரிக்காவை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெறும் நாக்அவுட் ஆட்டத்தில் இரவு பத்தரை மணிக்கு பிரேசில — ஜப்பானை எதிர்கொள்கிறது.

<<<<<<<<**END**>>>>>>>>